# பத்திரிக்கைச் செய்தி

தமிழ் நாடு அரசு

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

வட்டாட்சியர் அலுவலகம்,

உடுமலைப்பேட்டை- 642126

திருப்பூர் மாவட்டம்

அறிவிக்கை எண்.4637/2025/ஆ1 நாள்:10.07.2025

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் காலியாக உள்ள 20 கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அ) விண்ணப்பிக்க கடைசி நாள் : 08.08.2025
ஆ) படித்தல் மற்றும் எழுதுதல் திறனறி தேர்வு நாள் : 02.09.2025
இ) நேர்முக தேர்வு நாள் : 17.09.2025 முதல் 19.09.2025 மற்றும் 22.09.2025 முதல் 23.09.2025 வரை

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் - Level-06,( Rs.11100/-35100) |
| வட்டத்தின் பெயர் | உடுமலைப்பேட்டை |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | நிரப்பப்படவுள்ள கிராமங்களின் விவரம் |
| 20 | 1. நெ.1. கொசவம்பாளையம்<br>2. நெ.3. வீதம்பட்டி<br>3. நெ.5. மூங்கில்தொழுவு<br>4. நெ.17. வடுகபாளையம்<br>5. நெ.26. பூலாங்கிணர்<br>6. நெ.27. வெனசப்பட்டி<br>7. நெ.29. குறுஞ்சேரி<br>8. நெ.32. உடுமலைப்பேட்டை<br>9. நெ.34. ராகல்பாவி<br>10. நெ.38. புங்கமுத்தூர்<br>11. நெ.46. அரசூர்<br>12. நெ.53. தீபாலபட்டி<br>13. நெ.54. கிருஷ்ணாபுரம்<br>14. நெ.56. ஜல்லிபட்டி<br>15. நெ.57. லிங்கமாவூர்<br>16. நெ.62. தென்பூதிநத்தம்<br>17. நெ.63. வடபூதிநத்தம்<br>18. நெ.66. கண்ணம்மநாயக்கனூர்-I<br>19. நெ.67. குரல்குட்டை<br>20. நெ.71. குருவப்பநாக்கனூர் |

இன சுழற்சி விபரம்:

| வ.எண். | இன சுழற்சி எண் | பட்டியல் வகுப்பு | முன்னுரிமை/ முன்னுரிமையற்றவர் | பொது ஆண்/ பெண் | விதவை/ முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி |
|---|---|---|---|---|---|
| 1 | 47 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் | பெண் | - |
| 2 | 48 | பொது பிரிவு (தமிழ் வழிக் கல்வி) | முன்னுரிமையற்றவர் | பெண் | - |
| 3. | 49 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 4 | 50 | பழங்குடியினர்(ST) | முன்னுரிமை பெற்றவர் | பொது | - |
| 5 | 51 | பொது பிரிவு | முன்னுரிமை பெற்றவர் | பொது | |
| 6 | 52 | ஆதிதிராவிடர் | முன்னுரிமையற்றவர் | பெண் | - |
| 7 | 53 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் | முன்னுரிமை பெற்றவர் | பொது | |
| 8 | 54 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட் முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 9 | 55 | பொது பிரிவு | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 10 | 56 | ஆதிதிராவிடர் | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 11 | 57 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் | முன்னுரிமையற்றவர் | பெண் | - |
| 12 | 58 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட் முஸ்லீம்கள் தவிர) (தமிழ் வழிக் கல்வி) | முன்னுரிமையற்றவர் | பெண் | - |
| 13 | 59 | பொது பிரிவு | முன்னுரிமையற்றவர் | பொது | - |
| 14 | 60 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட் முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமை பெற்றவர் | பொது | |
| 15 | 61 | பொது பிரிவு | முன்னுரிமையற்றவர் | பெண் | |
| 16 | 62 | ஆதிதிராவிடர் (தமிழ் வழிக் கல்வி) | முன்னுரிமையற்றவர் | பொது | முன்னாள் ராணுவத்தினர் |
| 17 | 63 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் | முன்னுரிமையற்றவர் | பொது | |
| 18 | 64 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட் முஸ்லீம்கள் தவிர) | முன்னுரிமையற்றவர் | பொது | |
| 19 | 65 | பொது பிரிவு (தமிழ் வழிக் கல்வி) | முன்னுரிமையற்றவர் | பொது | |
| 20 | 66 | ஆதிதிராவிடர்(அருந்ததியர்) | முன்னுரிமையற்றவர் | பொது | |

தகுதிகள் :

| | |
|---|---|
| அ) வயது வரம்பு | குறைந்தபட்ச வயது 21நிறைவு செய்திருக்க வேண்டும் (அனைத்து பிரிவினருக்கும்)<br>அதிகபட்ச வயது 32 வயது - இதர பிரிவினர்<br><br>37* வயது ___ பிற்படுத்தப்பட்டோர் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் - பட்டியலினத்தவர் / பழங்குடியினர்.<br>(*அரசாணை(நிலை)எண்.91 மனிதவள மேலாண்மைத்(எஸ்)துறை நாள்:13.09.2021ன்படி வயது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.<br><br>மாற்றுத் திறனாளிகள்:- அதிகபட்ச வயது வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும்.<br>(Tamilnadu Government Servants(Condtions of Service)Act-2016)<br><br>பொதுப்பிரிவினரை சார்ந்த முன்னாள் ராணுவத்தினருக்கு 50 வயது<br><br>பிற்படுத்தப்பட்டோர் /மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் - பட்டியலினத்தவர் / பழங்குடியினர். வகுப்பினரை சார்ந்த முன்னாள் ராணுவத்தினருக்கு 55 வயது |
| ஆ) கல்வித்தகுதிகள் | தமிழ்நாடு அரசு தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ் தேர்வில் (SSLC)Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும்.<br>குறிப்பு: SSLC Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். (குறைந்தபட்ச கல்வித்தகுதி 10ஆம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி) |
| இ) இதர தகுதிகள் | 1.விண்ணப்பதாரர் உடுமலைப்பேட்டை வட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்<br>2.தமிழில் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>3.மிதிவண்டி ஓட்டத் தெரிந்திருக்க வேண்டும்.<br>4.விண்ணப்பதாரரின் கணவரோ மனைவியோ உயிரோடு இருக்கும்போது வேறு திருமணம் செய்துவராக இருக்கக் கூடாது.<br>5.காலிபணியிடம் அறிவிக்கப்பட்ட கிராமத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரருக்கு அக்கிராமபணியிடத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். |
| | |

| | |
|---|---|
| விண்ணப்பத்தில் இணைக்கப்பட வேண்டியவை | 1.கல்விச்சான்று<br>2.பிறப்பிடச் சான்று<br>3.ஜாதி சான்று<br>4.முன்னுரிமை கூறுபவர் அதற்கான சான்று<br>5.குடும்ப அட்டை<br>6.ஓட்டுனர் உரிமம்<br>7.புகைப்படம்<br>8.கையொப்பம் |

| | |
|---|---|
| விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்பதாரர்கள் மேற்படி பணிக்கான விண்ணப்பப் படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவண இணைப்புகளுடன் உடுமலைப்பேட்டை வட்டாட்சியருக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோக அளித்து விண்ணப்பிக்கலாம்.<br><br>மேற்படி பணிக்கான விண்ணப்ப படிவங்களை https://tiruppurnicin/notice_category/recruitment/ என்ற இணையதள முகவரியை அணுகி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |

முன்னுரிமை:-

1.ஒன்றாம் வகுப்பு முதல், தொடர்புடைய பணிவிதிகளில் நேரடி நியமனமுறைக்கென வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிவரை (ஒன்றாம் வகுப்பு முதல் 10/12 ஆம் வகுப்புகள், பட்டயம், இளங்கலை/முதுகலைப்பட்டங்கள்) முழுவதுமாகத் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் மற்றும் அச்சட்டத்திற்கான 2020-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்திதன் கீழ் முன்னுரிமை வழங்கப்பட தகுதியுடையவர்கள் ஆவர்.

2. இதர மொழிகளை பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று தேர்வுகளை மட்டும் தமிழில் எழுதியவர்கள் இம்முன்னுரிமை ஒதுக்கீட்டிற்கு தகுதியுடையவர் அல்லர்.

3. 1 முதல் 9 ஆம் வகுப்பு வரை பள்ளிக்கு செல்லாமல் நேரடியாக 10-ஆம் வகுப்புத் தேர்வினை எழுதித் தேர்ச்சி பெற்ற தனித் தேர்வர்கள் மற்றும் பிற மாநிலங்களில் தமிழ் அல்லாமல் இதர மொழியினை பயிற்று மொழியாக கொண்டு பயின்று, பின்பு இம்மாநிலத்தில் நேரடியாகச் சேரும் வகுப்பிலிருந்து பள்ளி இறுதி வகுப்புகள் வரை தமிழ் வழியில் பயின்றவர்கள் இம்முன்னுரிமைக்குத் தகுதியுடையவர் அல்லர்.

4.விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் மூலம் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் என்பதை உறுதி செய்ய இயலாத நிலையில் தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களை அரசாணை (நிலை) எண் 82, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 16.08.2021 இல் இணைப்பு I மற்றும் II இல் குறிப்பிட்டுள்ள படிவத்தில் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்

5.(அ)கொரோனா தொற்றினால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்) நேர்வில் கோவிட் 19 இறப்பு உறுதிப்படுத்தும் குழுத்தலைவரால் ஒப்பமிடப்பட்ட கோவிட் இறப்பிற்கான அலுவலர் ஆவணச் சான்றிதழ் அடிப்படையில் முன்னுரிமை பெறத் தகுதியுடையவராவார்கள்.

(ஆ).இதரகாரணங்களினால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகன்/மகள்)

(இ).தனியார் மற்றும் அரசால் நடத்தப்படும் அனாதை இல்லங்களில் தங்கி பயின்று வளர்ந்து வரும் தாயையும், தந்தையையும் இழந்த வாரிசுதாரர்கள் அவ்வில்லங்களிலிருந்து பெறப்படும் சான்றிதழின் அடிப்படையிலும்.

(ஈ)அங்கீகரிக்கப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் சேரமுடியாத கிராமப்புற தாய், தந்தையற்ற நபர்கள் வருவாய் வட்டாட்சியர் மூலம் பெறப்படும் "தாய் தந்தையற்றோர்" சான்றிதழ் அடிப்படையிலும் முன்னுரிமை பெற தகுதியுடையவர்களாவார்.

6.முதல் தலைமுறை பட்டதாரி சான்றின் அடிப்படையில் முன்னுரிமை கோருவோர் இவ்வறிவிப்பாணை வெளியாகும் தேதிக்கு முன்னதாக வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட முதல் தலைமுறை பட்டதாரி சான்றினை பெற்றவராக இருக்க வேண்டும்.

**<u>பொது:</u>**

விண்ணப்பதாரர் தனது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் கீழ்கண்ட ஆவணங்களின் நகல்களை இணைத்து வட்டாட்சியர், **உடுமலைப்பேட்டை** அலுவலகத்தில் நேரடியாகவோ (அலுவலக வேலை நேரத்திற்குள்) அல்லது வட்டாட்சியர் அலுவலக முகவரிக்கு பதிவஞ்சல் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.

1. கல்விசான்று நகல்
2. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று
3. இருப்பிடசான்று (ம) ஆதார் அட்டை / வாக்காளர் அடையாள அட்டை நகல்
4. சாதிச் சான்று நகல்
5. முன்னுரிமை கோருபவராயின் அதற்கான சான்று நகல்
6. குடும்ப அட்டை நகல்.
7. ஒட்டுநர் உரிமம் இருப்பின் அதன் நகல்

**நிபந்தனைகள் :**

1. விண்ணப்பதாரர்கள் எழுத, படிக்க தெரிந்தவராக இருக்க வேண்டும், மேலும் மிதிவண்டி ஓட்ட தெரிந்தவராக இருக்கவேண்டும்.
2. விண்ணப்பதாரர் கணவரோ, மனைவியோ உயிரோடு இருக்கும்போது வேறு திருமணம் செய்தவராக இருக்க கூடாது.
3. விண்ணப்பதாரர்கள் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டு முன்னுரிமை மற்றும் இனச்சுழற்சிபடி கிராம உதவியாளர் பணியிடம் வழங்கப்படும்.
4. ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் சமமான மதிப்பெண்களைப் பெற்று ஒரே தரவரிசையில் இடம் பெறும் நிலையில், சம்பந்தப்பட்டகிராமத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், அவ்வாறு முன்னுரிமை அளித்தும் ஒரே தரவரிசையில் இடம் பெறும் நிலையில், வயது அடிப்படையில் மூத்த விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவர்
(தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-பிரிவு 26 (5)

**முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கு முந்தைய கிராம உதவியாளர் நியமனம் தொடர்பான அறிவிக்கையில் ஏதும் பிரசுரம் செய்யப்பட்டு இருப்பின் / நிலுவையில் இருப்பேன் மேற்படி அனைத்து அறிவிக்கைகளும் இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது. மேலும் கூடுதல் தகவல்களுக்கு உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தை அணுகவும்.**

வட்டாட்சியர்
உடுமலைப்பேட்டை

10/07/2025

1.திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக ந.க.எண்.13635-2025-ஈ1, நாள்.03.07.2025.
2.உடுமலைப்பேட்டை, வட்டாட்சியர் அலுவலக ந.க.எண்.4637/2025ஆ1, நாள்:10.07.2025